**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

# DEPOSITION OF WITNESSES

## CC NO.478/2025

**PW.6**

**Date: 27.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரமேஷ் (கா.உ.ஆ) | வயது | 53 |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **27th day of April 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

2 முதல் 5 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 பா.நி.ச கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை;**

1. நான் தற்போது காயார் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜா என்பவரின் கையெழுத்துகள் காவல் நிலைய கோப்புகளை பார்வையிட்ட வகையில் எனக்கு நன்கு தெரியும். கடந்த 03/05/2023 அன்று அம்மா பேட்டை சத்திய சாய் தனியார் மருத்துவமனையில் இருந்து வந்த தகவலின் பேரில் அன்று காலை 05.30 மணியளவில் புலன் விசாரணை அதிகாரி மருத்துவமனை சென்று அங்கு

உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 பிரேம்குமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு அன்று காலை 06.30 மணியளவில் நிலைய குற்ற எண்.99/2023, ச.பி 147, 148, 294(பி), 324 மற்றும் 506(2) இ.த.ச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(03/05/2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்பு அன்று காலை 09.30 மணி அளவில் சம்பவ இடமான வெம்பேடு அ.சா.1ன் வீடு அருகே சாட்சிகள் குமார் மற்றும் கலைசெல்வன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(03/05/2023 தேதியிட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 3 மற்றும் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.5 மற்றும் குமரேசன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்பு இந்த வழக்கின் ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை அன்று மதியம் 12.30 மணியளவில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். 4 முதல் 7 எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மூலமாக முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. பின்பு காயமுற்ற அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருக்கு சிகிச்சை அளித்த சத்தியசாய் மருத்துவமனை மருத்துவர் திரு.தீபக் என்பவரை விசாரித்து கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார். (**02/05/2023 தேதியிட்ட அ.சா.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆகியோருக்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய**

**விபத்து பதிவேடு முறையே அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்பு சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என மருத்துவர் கருத்துரை வழங்கயதால் சட்டப்பிரிவு 324 இ.த.ச க்கு பதிலாக 326 இ.த.ச ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மூலமாக பிரிவு மாறுதல் செய்துள்ளார். (**05/05/2023 தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்பு புலன் விசாரணை நிறைவு செய்து எதிரிகளின் மீது ச.பி 147, 148, 294(பி), 326 மற்றும் 506(2) இ.த.ச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

4. நான் சாட்சியம் அளித்தது போன்று நான் சொல்லும் நாள், நேரம் மற்றும் இடத்தில் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கினை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.